( Based on New Official Model Question Paper Pattern )

## மேல்நிலை முதலாம் ஆண்டு

## கணக்குப்பதிவியல்

நேரம் : 2.30 மணி　　　　　　　　　　　　　　　　　　　　　　　　மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.　　　　　　　　　　　　　　20 × 1 = 20

1. பின்வருவனவற்றில் எது கணக்கியல் தகவலின் பயனீட்டாளர்கள் அல்ல?
அ. நிர்வாகம்　　ஆ. அரசு　　இ. நிதி ஆலோசகர்　　ஈ. கடனீந்தோர்

2. கீழ்கண்ட வாக்கியங்களைக் கருத்தில் கொள்க:
கூற்று ( A ) : கணக்கியல் சுழல், நிறுவனங்களின் நிதியியல் நடவடிக்கைகளை அடையாளம் கண்டு, பதிவு செய்வதில் தொடங்கி, கணக்காண்டிற்குரிய இறுதிக் கணக்குகள் தயாரிப்பதில் முடிவடைகிறது.
கூற்று ( B ) : முந்தைய ஆண்டின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் இறுதி இருப்புகளை, அடுத்தகணக்காண்டின் தொடக்க இருப்பாகக் கண்டு, கணக்கியல் சுழற்சியானது தொடர்கிறது.
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
அ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் சரி　　ஆ. ( A ) மற்றும் ( B ) இரண்டும் தவறு
இ. ( A ) சரி , ஆனால் ( B ) தவறு　　ஈ. ( A ) தவறு, ஆனால், ( B ) சரி

3. வேறுபட்ட ஒன்று எது?
அ. முடிவெடுக்க உதவுதல்　ஆ. முறையானபதிவேடுகள்　இ) கட்டுப்பாடு　ஈ. முன்னறிதல்

4. பின்வருவனவற்றில் எது சரியாக பொருந்தவில்லை?
அ. இரட்டைத் தன்மை கருத்து — ஒவ்வொரு நடவடிக்கையும் அல்லது நிகழ்வும் இரண்டு தன்மைகளைக் கொண்டிருக்கும்.
ஆ. பணமதிப்பீட்டுக் கருத்து — பணத்தால் அளவிடமுடியாத நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்படவேண்டும்.
இ. கணக்கேடுகள் பராமரிப்பு — கணக்கியலின் ஒரு பகுதியாகும்.
ஈ. முன்னெச்சரிக்கைமரபு — எச்சரிக்கையாக அல்லது பாதுகாப்பாக செயல்படும் கொள்கையாகும்.

5. பின்வருவனவற்றில் எது சரி ?
புலனாகாச் சொத்துக்கு உதாரணம் -----
அ. கட்டடம்　ஆ. அறைகலன்　இ. சரக்கிருப்பு　ஈ. காப்புரிமை

6. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹. 1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹. 60,000 எனில், அந் நிறுவனத்தில் முதல்__________
அ. ₹. 1,60,000　ஆ. ₹. 60,000　இ. ₹. 1,00,000　ஈ. ₹. 40,000

7. வங்கி சரிகட்டும் பட்டியலைத் தயாரிப்பவர் ------
அ. வங்கி　ஆ. கடனீந்தோர்　இ. வங்கியின் வாடிக்கையாளர்　ஈ. இவர்களில் எவரும் இல்லை

8. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
அ. ஆள்சார்கணக்குகள் மட்டும்　ஆ. சொத்துக் கணக்குகள் மட்டும்
இ. பெயரளவு கணக்குகள் மட்டும்　ஈ. அனைத்து கணக்குகளும்



9. பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?
அ. செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது
ஆ. விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப் படுத்தப்படாதது
இ. வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை
ஈ. ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது

10. குறிப்பேட்டில் பதிவாகி உள்ள நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு இனங்களை பேரேட்டில் உள்ள கணக்குகளுக்கு மாற்றம் செய்வது -----------
அ. மேலெழுதுதல்　ஆ. எடுத்தெழுதுதல்　இ. மாற்றியெழுதுதல்　ஈ. இவை ஏதும் இல்லை

11. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக்கணக்கின் இருப்பு, இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் தோன்றும்?
அ. பற்பல கடனாளிகள் க / கு　ஆ. வங்கி க / கு　இ. வட்டி பெற்றது க / கு
ஈ. முதல் க / கு

12. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது -------
அ. ஆண்டு இறுதியில்　ஆ. ஒரு குறிப்பிட்ட நாளில்　இ.ஒரு பருவகாலம் முடிந்ததும்
ஈ. இவை ஏதும் இல்லை.

13. மிகச் சரியான ஒன்றை தேர்தெடுக்கவும்.
சிறிய ரொக்கச் செலவுகளை பதிவு செய்யும் ஏடு ---------
அ. ரொக்க ஏடு　ஆ. சில்லறைரொக்க ஏடு　இ. தனிபத்தி ரொக்க ஏடு
ஈ. இவை ஏதும் இல்லை

14. தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை எவ்வாறு அழைக்கலாம்?
அ. சாதாரண ரொக்கஏடு　ஆ. இருபத்தி ரொக்கஏடு　இ. முப்பத்தி ரொக்கஏடு
ஈ. சில்லறை ரொக்கஏடு

15. வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போது வங்கியானது ----
அ. வாடிக்கையாளர்கணக்கில் வரவு செய்யும்　ஆ. வாடிக்கையாளர்கணக்கில் பற்று செய்யும்
இ. வாடிக்கையாளர்கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும்　ஈ. மேற்கண்ட ஏதுமில்லை

16. சொத்துக்களில் இருந்து பொறுப்புகளை கழித்தால்
அ. எடுப்பு　ஆ. முதல்　இ. வருமானம்　ஈ. மேற்கண்ட மூன்றும்

17. நடப்பு ஆண்டின் ஆரம்பத்தில் பதியக்கூடிய பதிவு ---------
அ. தோற்றுப் பதிவு　ஆ. இறுதிப் பதிவு　இ. தொடக்கப்பதிவு　ஈ. இவற்றில் ஏதும் இல்லை

18. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது .......
அ. அனைத்து சரக்குகளின் கொள்முதல்　ஆ. அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்
இ. அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்　ஈ. அனைத்து சொத்துக்களின் கொள்முதல்,

19. பற்று இருப்புகளும் மற்றும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல் --------
அ. குறிப்பேடு　ஆ. நாளேடு　இ. இருப்பாய்வு　ஈ. இருப்பு நிலைக்குறிப்பு

20. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு ----------
அ. இந்திய மைய வங்கி　ஆ. இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ. உச்சநீதி மன்றம்　ஈ. இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம்

## பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 –க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 2 = 14$

21. வணிக நடவடிக்கைகள் குறித்து முறையான ஆவணங்களை வைத்திருத்தல், பதிவு செய்தல், எடுத்தெழுதுதல், கடைசியாக இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் ஆகியவையே கணக்கியலின் முதன்மையான பணியாகும்.இதைத் தவிர,
 **கணக்கியலின் வேறு இரு பணிகளை குறிப்பிடுக.**

22. ஒரு நிறுவனத்தில், தங்களது நிதியை முதலீடு செய்யும் ஆர்வமுள்ளவர்கள் முதலீட்டாளர்கள்.அத்தகைய முதலீட்டாளர்கள்,
 **கணக்கியல் தகவல்களைத் தெரிந்து கொள்ள ஏன் ஆர்வமாக உள்ளனர்?**

23. **'ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்' - இந்த வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்தை விளக்குக.**

24. பின் வருனவற்றிக்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.
 (அ) சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்
 (ஆ) ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்

25. நிதிசார்ந்த நடவடிக்கைகளின் உண்மையான சான்றுகளை வெளிப்படுத்தும் ஆவணங்கள், ஆதார ஆவணங்கள் ஆகும்.
 **ஆதார ஆவணங்கள் எவற்றையெல்லாம் உள்ளடக்கியுள்ளது?**

26. பணமதிப்புடைய எந்த ஒரு இயற்பொருளும் அல்லது உரிமையும் சொத்து எனப்படும்.
 **சொத்துக்கணக்கிற்கு ஏதேனும் நான்கு உதாரணங்கள் தருக.**

27. இருப்பாய்வு என்பது, ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கை ஆகும்.
 **இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?**

28. வியாபாரத் தள்ளுபடி என்பது, விற்பனையாளரால் வாங்குபவருக்கு, சரக்குகளின் பட்டியல் விலையிலிருந்து குறைத்து வழங்குவதாகும்.
 1. **இத் தள்ளுபடி இடாப்பில் கழித்துக் காட்டப்படுமா?**
 2. **வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் எங்கு பதியப்படுகிறது?**

29. வங்கிக் கணக்கில் உண்மையான இருப்புக்கு அதிகமாக எடுப்பு செய்வதை வங்கி மேல்வரைப்பற்று எனப்படுகிறது.
 1. **இத்தகைய வசதி. எத்தகைய கணக்கு வைத்திருப்போருக்கு அளிக்கப்படுகின்றது?**
 2. **இவ்வாறு அதிகப்படியாக எடுக்கப்படும் தொகைக்கு, வட்டி கணக்கிடப்படுகிறதா?**

30. சாதாரண ரொக்க ஏடு மற்றும் இருபத்தி ரொக்க ஏடுகள் தயாரிக்கும் அதே முறையில்தான் முப்பத்தி ஏடும் தயாரிக்கப்படுகிறது எனில்,
 **முப்பத்தி ரொக்க ஏடு எத்தனை தொகைப் பத்திகளைக் கொண்டிருக்கும்? அவை யாவை?**



## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 31-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 3 = 21$

31. கீழ்காணும் குறுங்கட்டுரையைப் படித்து பார்த்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

 முன் அனுபவத்தின் அடிப்படையில், சில்லறை செலவுகளை செய்வதற்காக, தேவையான அல்லது போதுமான அளவு ஒரு குறிப்பிட்ட தொகை, ஒரு குறிப்பிட்ட காலத்தின் முதல் நாளன்று, சில்லறைக் காசாளருக்கு வழங்கப்படும். சில்லறைக் காசாளருக்கு முன்கூட்டி வழங்கப்படும் இத்தொகைக்கு 'முன்பணம்' என்று பெயர்.இத் தொகையிலிருந்து, சில்லறைக்காசாளர் செலவுகளை செய்து, அதனை சில்லறை ரொக்க ஏட்டில் பதிவு செய்கிறார். ஒரு குறிப்பிட்ட காலத்தின் முடிவில், சில்லறைக் காசாளர் தலைமைக்காசாளரிடம் சில்லறை ரொக்க ஏட்டை சமர்ப்பிப்பார். தலைமைக் காசாளர் சில்லறை செலவினங்களை கூர்ந்து ஆராய்ந்து பார்த்துவிட்டு, சில்லறைக் காசாளர் செய்த செலவுகளுக்கு சமமான ஒரு தொகையை அவரிடம் தருவார். இதனையே முன்பண மீட்பு முறை என்று அழைக்கப்படுகின்றது.

 <u>வினாக்கள்</u> :
 1 முன்பணம் என்றால் என்ன?
 2 சில்லறை ரொக்க ஏட்டினை யாரிடம் சமர்ப்பிக்கப் படுகின்றது?
 3 முன்பண மீட்பு முறை என்றால் என்ன?

32. தேவையென கருதும் இடத்தில் சரியான பதிவைத் தருக.
 1. <u>குமரன் வியாபாரம் தொடங்க முதல் இட்டது.</u>
 குமரன் முதல் க / கு ப
 ரொக்க க / கு
 2. <u>உரிமையாளர் வருமானம் வரி செலுத்தியது.</u>
 எடுப்புகள் க / கு ப
 ரொக்க க / கு
 3. <u>தொண்டுநிறுவனங்களுக்கு சரக்குகள் கொடுத்தது.</u>
 கொள்முதல் க / கு ப
 அறக்கொடை க / கு
 4. <u>மின் கட்டணம் செலுத்தியது</u>
 ரொக்க க / கு ப
 மின்கட்டண க / கு

33. குறிப்பேட்டுப் பதிவு தருக : 2018 மார்ச் 29 ஊதியம் வழங்கியது ₹. 25,000
 29 வாடகை செலுத்தியது ₹. 7,000

34. கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு தொடக்கப் பதிவினைத் தருக.
 1) ரொக்கம் ₹.18,000 2) வங்கி ₹. 8,000 3) கடனீந்தோர் ₹. 41,000
 4) கணினி ₹.27,000 5) சரக்கிருப்பு ₹. 10,000

35. உரிய துணை ஏடுகளில் பதிவு செய்க.

| 2017 | | ₹. |
|---|---|---|
| பிப் | 1. காஜோலிடம் சரக்கு வாங்கியது | 25,000 |
| | 7. சுனில் நமக்கு சரக்கு விற்றது | 9,000 |
| | 15. காஜோலுக்கு சரக்கு திருப்பியது | 3,000 |

36. ரொக்க பேரேட்டினை தயார் செய்க:

| 2018 | | ₹. |
|---|---|---|
| மார்ச் | 1. தொழில் தொடங்கியது | 29,000 |
| | 13. ரொக்க விற்பனை | 10,000 |
| | 20. ரொக்க கொள்முதல் செய்தது | 13,000 |

37. கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டை தயாரிக்கவும் :

1) எழில் வியாபாரம் தொடங்கியது ₹.75,000 2) சரக்கு கொள்முதல் செய்தது ₹.25,000
3) ஊதியம் வழங்கியது ₹.27,000

38. கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு திருமதி. கீதாவின் தனிப்பத்தி ரொக்க ஏட்டினை தயார் செய்க.

| 2013 | | ₹. |
|---|---|---|
| மார்ச் | 1. கைரொக்கம் | 46,000 |
| | 13. வங்கியில் செலுத்தியது | 14,000 |
| | 25. பங்காதாயம் பெற்றது | 7,000 |
| | 27. காசோலை பெற்றது | 2,000 |

39. அனைத்து கணக்குகளும் ( ஆள்சார் கணக்குகள், பெயரளவு கணக்குகள், சொத்துக் கணக்குகள்) நடவடிக்கைகளை பதிவு செய்வதற்காக தனித்தனியே இரண்டு விதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. ஒன்று பற்றுடன் தொடர்புடையது. மற்றொன்று வரவுடன் தொடர்புடையது. இவைகள் கணக்கியலின் பொன்னான விதிகள் அல்லது இரட்டைப்பதிவு முறையின் விதிகள் என்று அழைக்கப்படுகின்றன.

**கணக்கியலின் பொன்னான விதிகள் யாவை?**

40. கீழ்கண்ட விவரங்களைக்கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**<u>மாற்றுச்சீட்டு</u>**

முத்திரை வரி
வில்லை

144, மேற்கு தெரு,
காஞ்சிபுரம்,
01.05.218.

₹. 10,000/-

இத் தேதியிலிருந்து மூன்று மாதங்கள் சென்றவுடன், மதிப்புப் பெற்றுக் கொண்ட வகையில், எனக்கோ அல்லது எனது ஆணைப் பெற்றவருக்கோ ரூபாய் பத்தாயிரம் மட்டும் செலுத்தவும்.

எழுதப்பெறுநர்
திரு.A. மதியழகன்,
430 தங்கசாலை,
பண்ருட்டி.

B. பரணிக்குமர்

<u>வினாக்கள்</u>

1. எந்த தேதியில் தொகை செலுத்த வேண்டும்? ( செலுத்தற்குரிய நாள் எது? )
2. எழுதுநர் யார்?
3. கடனாளியின் பெயர் என்ன?



## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. கீழ்க்காணும் நடவடிக்கைகளின் அடிப்படையில் கணக்கியல் சமன்பாட்டினைக் காட்டுக:

| | |
|---|---|
| பாலா தொழில் தொடங்க ரொக்கம் போட்டது | ₹. 50,000 |
| கடன் கொள்முதல் செய்தது | ₹. 30,000 |
| ரொக்க கொள்முதல் | ₹. 20,000 |
| அறைகலன் வாங்கியது | ₹. 10,000 |
| கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம் | ₹. 12,000 |

( அல்லது )

கீழ்கண்ட விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பிலிருந்து குறிபேட்டுப் பதிவில் விடுபட்ட தொகையினையும், அதன் கணக்குகளையும் கண்டுபிடித்து, முழுமையான குறிப்பேட்டில் எழுதவும்.

கோகிலா ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2017அக்.1 | ---------- ப<br>----------<br>( கோகிலா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 5,00,000 | ---------- |
| 8 | -------------- ப<br>-------------------<br>(பழனி நிறுவனத்திற்கு கடன் விற்பனை செய்தது ) | | 25,000 | ---------- |
| 15 | ------------ ப<br>----------<br>(சொந்த பயனுக்காக ரொக்கம் எடுத்தது) | | ---------- | 12.500 |
| 25 | ---------------- ப<br>----------------<br>(வங்கியில் ரொக்கம் செலுத்தியது) | | 11,000 | 11,000 |
| 28 | ---------------- ப<br>----------------<br>( D நிறுவனத்திடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டு ) | | 7,000 | 7,000 |

42. திரு. ஆனந்தன் அவர்களின் ஏடுகளில் கீழ்கானும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| 2018 | | ₹. |
|---|---|---|
| மார்ச் | 1. திரு. ஆனந்தன் தொழில் தொடங்கியது | 42,000 |
| | 3. காசோலை கொடுத்து சரக்கு வாங்கியது | 10,000 |
| | 5. இணைய வங்கி மூலம் பணம் செலுத்தி கொள்முதல் செய்தது | 7,000 |
| | 11. அலுவலக செலவுகளுக்கு வங்கியிலிருந்து | 15,000 |

பணம் எடுத்தது

12. மணியிடமிருந்து ₹. 13,000 க்கான சரக்குகள் வாங்கப்பட்டு, அதற்கான தொகை எடுப்பு அட்டை மூலம் செலுத்தப்பட்டது.

30. வாடகை செலுத்தியது ₹. 7,000

( அல்லது )

கீழ்க்காணும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்து, அவற்றை பேரேட்டில் எடுத்து எழுதுக.

2017

ஜூன் 1 பரசுராமன் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹. 50,000

4 ரொக்கம் செலுத்தி அறைகலன் வாங்கியது ₹. 6,000

7 ஹாரிஸ் என்பவரிடமிருந்து இயந்திரம் ஒன்றை கடனாக வாங்கியது ₹. 10,000

10 ரொக்கம் செலுத்தி சரக்குகள் வாங்கியது ₹. 4,000

18 காப்பீட்டு முனைமம் செலுத்தியது ₹. 100

43. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயாரிக்கவும் :

i) ரொக்க ஏட்டின்படி பற்று இருப்பு ₹. 14,500
ii) விடுத்த காசோலை இன்னும் பணம் ஆக்கப்படாதவை ₹. 1,700
iii) வங்கி முன்னிலைப்படுத்தப்படாத காசோலை. ₹. 8,000
iv) வங்கி அளித்த வட்டி ₹. 1,800
v) வங்கி கட்டணம் ₹. 1,200

( அல்லது )

பின்வரும் விவரங்களைக் கொண்டு முன்பணமீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்கஏட்டினைத் தயாரிக்கவும்.

| 2017 அக். | | ₹. |
|---|---|---|
| 1 | காசாளரிடம் பெற்றது | 2,500 |
| 2 | கூலி கொடுத்தது | 260 |
| 5 | எழுது பொருட்கள் வாங்கியது | 300 |
| 6 | பணியாளர் பேருந்து கட்டணம் | 200 |
| 12 | சிற்றுண்டி செலவுகள் செய்தது | 180 |
| 16 | ஏற்றிச் செல்செலவுகள் செய்தது | 160 |
| 20 | பயணச் செலவுகள் செய்தது | 188 |
| 25 | போக்குவரத்துச் செலவுகள் செய்தது | 320 |
| 27 | வருவாய்வில்லைகள் வாங்கியது | 48 |
| 28 | அலுவலகச் சுத்தம் செய்யசெலவு செய்தது | 140 |
| 29 | பதிவு தபால்கள் அனுப்பியது | 180 |
| 30 | வாடகைமகிழுந்து கட்டணம் செலுத்தியது | 219 |

44. கீழே தப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கொண்டு திரு. இராம் அவர்களின் விற்பனை ஏடு தயார் செய்க.

2003

ஜூலை 5. எஸ்.எஸ். டிரேடர்ஸூக்கு கடனுக்கு விற்றது:

10 நாற்காலிகள் - ஒன்று ₹.1,500 வீதம் } 10 % தள்ளுபடி அனுமதிக்கவும்
10 மேஜைகள் - ஒன்று ₹. 1,000 வீதம் }

8. இராஜாவிற்கு கடனுக்கு விற்ற சரக்கு

15 நாற்காலிகள் - ஒன்று ₹. 900 வீதம்



20. மோகன் & கோவிற்கு கடனுக்கு விற்றது;

5 அலமாரிகள் - ஒன்று ₹. 2,500 வீதம்

10 மேஜைகள் - ஒன்று ₹.3,000 வீதம்

23. நாராயணனுக்கு பழைய கணிப்பொறியினை கடனுக்கு விற்றது ரூ. 6,000

28. குமரனுக்கு ரொக்க விற்பனை

10 நாற்காலிகள் நாற்காலி ஒன்று ₹. 250 வீதம்

( அல்லது )

கீழ்கண்ட நடவடிக்கைகளை விற்பனைத் திருப்ப ஏட்டில் பதிவு செய்து, பேரேட்டில் எடுத்து எழுதுக.

2015 ஜனவரி 5 பழுதடைந்த காரணமாக ஐந்து அலமாரிகள் ஒன்று ₹.5,000, கோபு திருப்பியது.ரொக்கம் செலுத்தப்படவில்லை.

ஜனவரி 25 தரம் குறைவு காரணமாக மூன்று பாபா சூட்டுகள், ஒன்று₹.3,500, அமீரிடமிருந்து திரும்ப பெறப்பட்டது. ரொக்கம் செலுத்தப்படவில்லை.

ஜனவரி 27 அனுப்பபட்ட மாதிரிக்கேற்ப சரக்குகள் இல்லாததால், ரொக்கம் பிறகு பெற்றுக்கொள்வதாககி கூறி கண்ணன் திருப்பிய சரக்கின் மதிப்பு ₹. 23,000

45. பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு ரொக்கம், வங்கி மற்றும் தள்ளுபடி பத்திகள் கொண்ட ரொக்க ஏடு தயார் செய்க.

| 2012 பிப்ரவரி | | ₹ |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 30,000 |
| | வங்கி இருப்பு | 20,000 |
| 4 | வங்கியில் செலுத்தியது | 18,000 |
| 12 | சுனிலிடம் பெற்ற காசோலை | 12,000 |
| | தள்ளுபடி அனுமதித்தது | 300 |
| 17 | கவிதாவிற்ககு வழங்கிய காசோலை | 10,000 |
| | தள்ளுபடி பெற்றது | 200 |
| 18 | சொந்த தேவைக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 2,000 |
| 20 | அலுவலகச் செலவிற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 8,000 |

( அல்லது )

திரு.மதன் என்பவர் ஒரு அறைகலன் கடை நடத்தி வருகிறார். அவர் தன்னுடைய பேரேட்டு இருப்புகளிலிருந்து இருப்பாய்வு ஒன்றை தயாரித்துள்ளார். அந்த இருப்பாய்வு சமன் படவில்லை. அவர் அதனை சரியாக தயாரித்துள்ளாரா என்பதனை கண்டறிக.

| விவரம் | பே.ப.எ | பற்று ( ₹ ) | வரவு ( ₹ ) |
|---|---|---|---|
| முதல் | | | 4,20,000 |
| கட்டடம் | | 1,15,000 | |
| இயந்திரம் | | | 60,000 |
| அறைகலன் கொண்டுவர செலவு செய்தது | | 79,000 | |
| தொடக்கச் சரக்கிருப்பு | | | 86,000 |
| கொள்முதல் | | | 94,000 |

| | | | |
|---|---|---|---|
| விற்பனை | | 1,96,000 | |
| பற்பல கடனாளிகள் | | 16,200 | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கீடு | | | 7,300 |
| கைவச ரொக்கம் | | | 25,000 |
| வங்கிவச ரொக்கம் | | 84,700 | |
| சம்பளம் | | | 94,000 |
| வாடகை செலுத்தியது | | 48,000 | |
| அளித்த கழிவு | | 1,400 | |
| வருமான வரி | | 5,800 | |
| காப்பீடு | | 2,400 | |
| பொதுச் செலவுகள் | | | 800 |
| கடனீந்தோர் | | | 89,000 |
| மொத்தம் | | 5,48,500 | 8,76,100 |

46. கீழ்க்கானும் விவரங்களைக் கொண்டு திரு. பரணி அவர்களின் 2016 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்கவும்.

| கணக்கின் பெயர் | தொகை ₹ | கணக்கின் பெயர் | தொகை ₹ |
|---|---|---|---|
| எடுப்பு | 43,000 | தொடக்கச் சரக்கிருப்பு | 2,23,500 |
| பற்பல கடனீந்தோர் | 61,500 | வங்கி இருப்பு | 86,250 |
| கடனாளிகள் | 55,000 | கொள்முதல் | 2.98,000 |
| முதல் | 2,12,000 | விற்பனை | 3,64,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 72,600 | சம்பளம் | 44,950 |
| பெற்றக்கடன் | 2,50,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 22,000 |
| அறைகலன் | 12,250 | கையிருப்பு ரொக்கம் | 64,950 |
| பயணச் செலவுகள் | 12,550 | தள்ளுபடி பெற்றது | 4,550 |

( அல்லது )

சந்திரனின் ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| 2017 | | ₹ |
| நவ 1 | ரொக்கஇருப்பு | 22,000 |
| 2 | ரொக்க விற்பனை | 14,000 |
| 3 | கோவிந்தனுக்கு கடனுக்கு விற்றது | 12,000 |
| 4 | பலராமனிடம் கடனுக்கு கொள்முதல் செய்தது | 27,000 |
| 5 | ரொக்கக் கொள்முதல் | 8,800 |
| 8 | கோவிந்தனிடமிருந்து 2% ரொக்க தள்ளுபடி கழித்தது போக மீதி தொகைப் பெறப்பட்டது | |
| 12 | பலராமனுக்கு ₹. 26,800 பணம் செலுத்தி அவர் கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது | |



| | | |
|---|---|---|
| 15 | சொந்த தேவைக்கு பணம் எடுத்தது | 4,000 |
| 28 | ரொக்கம் வங்கியில் செலுத்தியது | 5,000 |
| 29 | மதன் தரவேண்டியது ₹.5,000 , ₹.4,800 செலுத்தி அவர் கணக்கைத் தீர்த்துக் கொண்டார். | |
| 30 | சம்பளம் ரொக்கமாக அளித்தது | 4,000 |

47. பின்வரும் தொடக்கப் பதிவினைக் கொண்டு அருண் என்பவரின் ஏடுகளில் முக்கிய பேரேட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

அருண் என்பவரின் ஏடுகளில்

<u>குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்றுத்தொகை ₹. | வரவுத்தொகை ₹. |
|---|---|---|---|---|
| 2014 ஜூலை 14 | ரொக்கக/கு ப | | 8,000 | |
| | வங்கிக/கு ப | | 60,000 | |
| | அறைகலன்க/கு ப | | 15,000 | |
| | கடனாளிகள் க/கு ப | | 28,000 | |
| | சரக்கிருப்பு க/கு ப | | 40,000 | |
| | கலா க/கு | | | 51,000 |
| | அருண் முதல் க/கு | | | 1,00,000 |
| | (சென்ற ஆண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கணக்கில் கொண்டு வரப்பட்டது) | | | |

( அல்லது )

பின்வரும் நடவடிக்கைகளை திருமதி. சுமித்ராவின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

2017 ஆகஸ்ட்

| | | |
|---|---|---|
| 1 | கையிருப்பு ரொக்கம் | 6,000 |
| 4 | ரொக்க விற்பனை | 4,000 |
| 5 | மணிக்கு கடன் விற்பனை | 1,000 |
| 7 | அச்சுக் கட்டணம் | 3,000 |
| 9 | கடன் கொள்முதல் செய்தது | 1,200 |
| 11 | ரவியிடமிருந்து காசோலை பெற்றது | 3,000 |
| 15 | கணிப்பொறி வாங்கியது | 25,000 |
| 23 | சொந்த செலவிற்கு பணம் எடுத்தது | 5,000 |

B. BALAJI, PG ASST IN COMMERCE, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613